**புதுச்சேரி அரசு**
**வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை**
**வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA)**
**காரைக்கால்**

**நீர் மேலாண்மை மற்றும் சம்பா முன்பருவ சாகுபடி குறித்த பயிற்சி**

காரைக்கால் வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறையின் கீழ் இயங்கும் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமையானது (ATMA) பிரதம மந்திரி நீர்பாசனத் திட்டத்தின் மூலம் (PMKSY) நீர் மேலாண்மை மற்றும் சம்பா முன்பருவ சாகுபடி குறித்த பதினொரு நாள் பயிற்சி முகாம்கள் காரைக்கால் மாவட்டத்திலுள்ள பதினொரு உழவர் உதவியகத்திலும் (13.09.2019 முதல் 20.09.2019 வரை) நடத்தப்பட்டது. இப்பயிற்சியை காரைக்கால் வேளாண் துறையின் கூடுதல் வேளாண் இயக்குனர் (பொறுப்பு) திரு. J. செந்தில் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இப்பயிற்சியில் திரு R. கணேசன், துணை வேளாண் இயக்குனர் (இடுப்பொருள்) மற்றும் முனைவர் திருமதி R. ஜெயந்தி, துணை திட்ட இயக்குனர் (ஆத்மா) அவர்கள் நீர் மேலாண்மையின் முக்கியத்துவம் குறித்தும் மற்றும் இப்பயிற்சியின் முக்கியத்துவம் குறித்தும் எடுத்துரைத்தனர்.

இதில் பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் திரு.A.L நாராயணன், பேராசிரியர்கள், முனைவர் திரு.R. பூங்குழலன், முனைவர் திரு. R. மோகன், முனைவர் திருமதி c. சுசிலா, முனைவர் செல்வி s. மாலா, உதவி பேராசிரியர்கள் முனைவர் திரு. P. சரவணன் மற்றும் திருமதி V. ஸ்ரீதேவி ஆகியோர் நீர் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர். மேலும் வேளாண் அலுவலர்கள் திருமதி R. சுமதி, திருமதி.A. மேரி ஜூலியட், திருமதி M. இந்துமதி, திரு. R. சரவணன், திருமதி S . சுபானந்தி, திருமதி K. அமினா பீபீ, திருமதி. R. ராஜலெட்சுமி, திரு T. இளங்கோ சிவம் மற்றும் திரு. D. பாலசண்முகம் ஆகியோர் சம்பா சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தனர்.

மேலும் வேளாண் அலுவலர்கள் திரு.P. அலன் மற்றும் திருமதி.P. ஷர்மிளா அவர்கள் காரைக்காலில் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைப்பதின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தனர். மேலும், இதற்கான ஏற்பாடுகளை அந்தந்த பகுதி வேளாண் அலுவலர்கள், விரிவாக்க பணியாளர்கள் மற்றும் ஆத்மா வட்டாரா தொழில்நுட்ப மேலாளர்கள் செல்வி. G. மாலதி, திரு. P. புருசோத் ராஜ், திருமதி. டாக்டர் B. சங்கீதா, திரு. T. கண்ணன், துணை வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் திரு. P. பார்த்திபன், R. உமாதேவி, U. சிவராஜ் ஆகியோர் செய்திருந்தனர். இதில் மேலும், வேளாண் கல்லூரி மாணவிகள் ஒருங்கிணைந்த பண்ணை அமைத்தல் மற்றும் மண்ணில்லா விவசாயம் செய்யும் முறைகளை பற்றிய தொழில்நுட்பத்தினை கண்காட்சி மூலம் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தனர்.

23.9.19

**கூடுதல் வேளாண் இயக்குனர்**
**மற்றும் திட்ட இயக்குனர் (பொறுப்பு),**
**ஆத்மா, காரைக்கால்**

GOVT. OF PUDUCHERRY INFORMATION & PUBLICITY DEPT KARAIKAL